தமிழ் நாடு சட்டப் பேரவை.

LEGISLATURE
1 3 OCT 1971
MADRAS

வெள்ளிக்கிழமை, 1970 ஏப்ரல் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடியில் பண மோசடி

*குறுகிய கால வினா எண் 2—திரு. டி. மார்டின்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு தீவிர சாகுபடித் திட்டத்தில் சுமார் 80 ஆயிரம் ரூபாய்கள் மோசடி ஏற்பட்டுள்ளதையொட்டி சம்பந்தப்பட்ட விவசாய இலாக்கா அதிகாரி மீது தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மரவள்ளிக்கிழங்கு நாற்றுகளை சில குறிப்பிட்ட விவசாயிகளிடம் வாங்கியதாகவும் அவற்றில் சிலவற்றை வேறு விவசாயிகளுக்கு விற்பனை செய்ததாகவும் பொய்க்கணக்கு எழுதியதன் விளைவாக சம்பந்தப்பட்ட மாவட்ட விவசாய அதிகாரியின் பேரிலும் அவருக்கு இது விஷயத்தில் உடந்தையாக இருந்ததாக ஒரு விவசாய விளக்குனரின் பேரிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்கு தொடருவதற்கு வேண்டிய சாட்சியங்களை ஊழல் கண்காணிப்பு இயக்குநர் மேற்கொண்டு சேகரித்து வருகிறார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த வழக்கு சம்பந்தமாக யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறாரா? யாரையாவது தப்பு சாட்சியாக—அப்ரூவராக—மாற்றுவதற்கு இலாக்கா வழிவகை செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, மாவட்ட விவசாய அதிகாரி திரு. எ. எல். பெருமாள் என்பவர்தான் இப்படிப்பட்ட தவறு செய்திருப்பதாகக் கண்டு

பிடிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குத் துணையாக திரு. சி. கே. இரவீந்திரன் என்பவர் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, இப்பொழுது விஜிலன்ஸ் டைரக்டர் அவர்கள் அதுகுறித்து விசாரணை செய்துகொண்டு வருகிறார்கள். இன்னமும் அந்த இயக்குநர் அவர்கள் மேலும் பல சாட்சியங்களைத் தேடிக்கொண்டு புலன் விசாரணை நடத்திக்கொண்டு வருகிறார். யாரும் இதன் மூலமாகக் கைது செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பு இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக் கிழங்கு சாகுபடித் திட்டத்திலே ஏற்பட்ட ஊழல் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ரூபாய் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா ? அவர்கள் பேரில் தீவிர நடவடிக்கை எடுத்து சரியான தண்டனை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கிட்டத் தட்ட ரூ. 79,300 இப்படி ஒழுங்கீனமாகக் கையாடல் செய்யப் பட்டதாகக் குறிப்பு இருக்கிறது. அதற்கு வேண்டிய சாட்சியங் களைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். விசாரணை நடத்திய தற்குப்பிறகு, அது உறுதியாக்கப்பட்டதற்குப் பிறகு தகுந்த தண்டனை அளிக்கவேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கேஸ் சம்பந்தமாக எப்.ஐ.ஆர். கோர்ட்டில் தாக்கல் ஆயிற்றா? எப்பொழுது சார்ஜ் ஷீட் செய்யப்படும் என்பதை அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விஜிலன்ஸ் அண்டு ஆண்டி-கரப்ஷன் இயக்குநர் அவர்கள் இன்னமும் புலன் விசாரணை செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த வழக்கில், அரமனை பஞ்சாயத்துத் தலைவரும் ஈடுபட்டிருப்பதாக வதந்திகள் வந்துகொண்டிருக் கின்றன. அரசியல் காரணமாக அவர் மீதுள்ள புகார் அதிகமாக விசாரணை செய்யப்படவில்லை என்ற புகார் மக்களிடையே இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : புலன் விசாரணை செய்துகொண்டிருக்கிறபடியால் யார் யார் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது பிறகுதான் சொல்ல முடியுமே தவிர, யார் யார் என்று இப்பொழுது சொல்லுவதற்கில்லை.

Book binding centre for physically handicaped

*655 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :